www.agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, மார்ச் - 2020**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, March - 2020**

| தரம் :- 13 (2020) | தமிழ் - I | நேரம் :- 3 மணித்தியாலம் 10 நிமிடம் |
|---|---|---|

❖ **பகுதி I இல் உள்ள இரு வினாக்களுக்கும், பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

**பகுதி I**

1) **மேல் வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

அ) அறுகுளத் துகுத்து மகல்வயற் பொழிந்தும்
உறுமிடத் துதவா துவர்நில மூட்டியும்
வரையா மரபின் மாரி போலக்
கடாஅ யானைக் கழற்காற் பேகன்
கொடை மடம் படுத லல்லது
படை மடம் படான்பிறர் படைமயக் குறினே.

(i) இச் செய்யுளின் திணை, துறை ஆகியவற்றைக் குறிப்பிட்டு அவை குறித்துச் சுருக்கமாக விளக்குக.
(ii) இச் செய்யுளில் அமைந்துள்ள உவமையின் சிறப்பை விளக்குக.
(iii) பின்வரும் சொற்றொடர் இச்செய்யுளில் பெறும் முக்கியத்துவம் குறித்து விளக்குக.
‘கொடை மடம் படுதல்’
‘படை மடம் படான்’

(12 புள்ளிகள்)

ஆ) மாமுனி வர்க்குற வாகி வனத்திடை யேவாழும்
கோமுனி யத்தகு மென்று மனத்திறை கொள்ளாதே
ஏமுனை யுற்றிடி லேழு கடற்படை யென்றாலும்
ஆமுனை யிற்சிறு கூழென விப்பொழு தாகாதோ

(i) இச் செய்யுள் இடம்பெறும் சந்தர்ப்பத்தினை விளக்குக.
(ii) ‘கோமுனியத்தகும்’ எனும் தொடரின் மூலம் குறிப்பிடப்படுபவர் யார், அவ்வாறு செயற்படக்கூடும் என்பதற்கான காரணத்தைத் தெளிவுபடுத்துக.
(iii) குகனது தன்னம்பிக்கை உணர்வு வெளிப்படுத்தப்பட்டிருக்குமாற்றை விளக்குக.

(12 புள்ளிகள்)

(12 + 12 = 24 புள்ளிகள்)

2) ‘அ’ பகுதியிலுள்ள செய்யுளைப்படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

அல்லது

‘ஆ’ பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

அ) குணதிசை மருங்கின் நாள்முதிர் மதியமும்
குடதிசை மருங்கின் சென்றுவீழ் கதிரும்
வெள்ளிவெண் தோட்டொடு, பொற்றோடாக
எள்ளறு திருமுகம் பொலியப் பெய்தலும்.



agaram.lk

www.agaram.lk

அன்னச் சேவல் அயர்ந்து விளை யாடிய
தன்னுறு பெடையைத் தாமரை யடக்கப்
பூம்பொறி சிதையக் கிழித்துப் பெடை கொண்டு
ஓங்கிருந் தெங்கின் உயர்மடல் ஏற

அன்றில் பேடை அரிக்குரல் அழைஇச்
சென்றுவீழ் பொழுது சேவற்கு இசைப்ப
பவளச் செங்காற் பறவைக் கானத்துக்
குவளை மேய்ந்த குடக்கட் சேதா

முலைப் பொழி தீம்பால் எழுதுகள் அவிப்பக்
கன்று நினை குரல் மன்றுவழிப் படர,
அந்தி அந்தணர் செந்தீப் பேணப்
பைந்தொடி மகளிர் பலர் விளக்கு எடுப்ப

யாழோர் மருதத்து இன்னரம் புனரக்
கோவலர் முல்லைக் குழல்மேற் கொள்ள
அமரக மருங்கிற் கணவனை இழந்து
தமரகம் புகூஉம் ஒருமகள் போலக்

கதிராற்றுப்படுத்த முதிராத் துன்பமொடு
அந்தி என்னும் பசலைமெய் யாட்டி
வந்திறுத் தனனால் மாநகர் மருங்கென்.

(i) அந்திப் பொழுதில் இடம் பெறுவதான பசுக்கள், மனிதர்களின் செயற்பாடுகள் பற்றி விபரிக்குக.

(ii) இச் செய்யுளில் வெளிப்படும் அன்னப்பறவையின் காதல் உணர்வை விபரிப்பதோடு அதனூடாக உணர்த்தப்படும் குறிப்புப் பொருளையும் சுருக்கமாக விளக்குக.

(iii) புகார் நகரத்தைப் பெண்ணாக உருவகிப்பதில் கவிஞரிடத்தே வெளிப்படும் கற்பனையாற்றலைப் புலப்படுத்துக.

(iv) ‘அமரக மருங்கிற் கணவனை இழந்து
தமரகம் புகூஉம் ஒருமகள் போலக்
கதிராற்றுப் படுத்த முதிராத் துன்பமொடு
அந்தி என்னும் பசலை மெய்யாட்டி’
இவ்வரிகளில் நீர் காணும் கவிச்சிறப்பினை விளக்குக.

(16 புள்ளிகள்)

அல்லது

ஆ) ஆம், அந்த மேசைதான் சின்னத்தம்பி ஆசிரியரின் ஆஸ்தான பீடம். அந்த ஆஸ்தான பீடத்தில் அமர்ந்து படிப்பித்துக் கொண்டே மரக்கறியும் வெட்டுவார். கீரையும் அரிவார். வெங்காயத்தையும் உரிப்பார். எது எப்படியிருப்பினும் எல்லா வகுப்புகளிலும் பாடங்கள் ஒழுங்காகவே நடக்கும். ஒன்றரை மணிக்குப் பாடசாலை முடிந்ததும் சின்னத்தம்பி ஆசிரியரைத் தவிர மற்றைய ஐந்து ஆசிரியர்களும் பாடசாலையை விட்டுப்போய் விடுவார்கள். அடுத்த நாட் காலையிற்தான் அவர்களைப் பாடசாலையிற் காணலாம். ஆனால் சின்னத்தம்பி ஆசிரியர் மதியச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு ஒரு சுருட்டைப் பற்றவைத்து பாடசாலைக்கு முன்னால் தெருவோரத்தில்நிழல் கவித்து நின்ற ஆலமரத்தின்

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

www.agaram.lk

கீழே தன் படங்குச் சாய் கதிரையில் அமர்ந்து ஒரு கோழித்தூக்கம் போட்டுவிட்டு மூன்று மணிக்கெல்லாம் மீண்டும் தன் ஆஸ்தான பீடத்தில் அமர்ந்து கொள்வார். பெரிய வகுப்பு மாணவர்களுக்கு ஆங்கிலப் பாடமும் நடத்துவார். இன்று ஆங்கிலப்பாடம் முடிவடைந்து விட்டது போலும் வெளியே இருள் பரவிக்கொண்டு வந்தது.

'கொஞ்சம் இரும்' என்று எழுந்து சென்று அறைக்குள்ளே இருந்த பெற்றோமக்ஸ் விளக்கை எடுத்து வந்து அதைக்கொழுத்தும் முயற்சியில் ஈடுபட்டார். சில நிமிடங்களில் ஆலங்கேணிக் கிராமத்துக்கு அறிவொளியைக் கொடுத்துக் கொண்டிருந்த அப்பாடசாலையின் பெற்றோமக்ஸ் விளக்கு பிரகாசமாக எரிந்து இருளைக் கடிந்து கொண்டிருந்தது. அந்த விளக்கொளியில் அககிராமத்துப் பாடசாலை மாணவர்கள் பலர் வந்து மௌனமாகத் தம் பாடங்களைப் படிப்பார்கள். தங்கள் வீட்டுப்பாடங்களைச் செய்வார்கள். அந்தப் பெற்றோமக்ஸ் விளக்கொளியில் தாமோதரமும் நான்கு ஆண்டுகள் படித்திருக்கிறான்.

மீண்டும் வசதியாகச் சின்னத்தம்பி ஆசிரியர் தம் இருக்கையில் அமர்ந்து கொண்டதும் தாமோதரம் அவரிடம் கேட்டான். "சௌந்தரம் பாடசாலைக்கு வாறதில்லையாமே அம்பலவாணன் எனக்கு எழுதியிருந்தான் சேர்"

"மச்சாளில் மெத்தக் கரிசனை தான். நானும் எவ்வளவோ தெண்டித்துப் பாத்துட்டன் அவள் பெரிய மனுஷி ஆனபிறகு உன்ரை மாமா அவளைப் பாடசாலைக்கு அனுப்பமாட்டன் என்றிட்டார். என்னால ஒண்ணுஞ் செய்ய முடியல்ல" என்றார் சின்னத்தம்பி. 'அறிவு கெட்ட ஜன்மங்கள்' என்று முணுமுணுத்துக் கொண்டான் தாமோதரம்.

(i) பின்வரும் சொற்பொருளைக் குறிப்பிடுக.
ஆஸ்தானபீடம், கோழித்தூக்கம்

(ii) 'பெற்றோல்மக்ஸ்' பற்றிய விபரணம் இவ் உரைப்பகுதியில் பெறும் முக்கியத்துவத்தை விளக்குக.

(iii) ஆலங்கேணிக் கிராமத்தின் கல்வி விழிப்புணர்வு பற்றிய சிந்தனை இப்பகுதியினூடாக எவ்விதம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பதை விளக்குக.

(iv) ஆசிரியரின் உரைநடை பற்றிக் கருத்துரை வழங்குக.

(16 புள்ளிகள்)

## பகுதி II

3) 'இடனறிதல்' என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியுள்ளவற்றை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

அ) பகைவரது அரணின் புறத்தே தங்குதற்குரிய இடத்தை அறிதல்.

ஆ) பகைவரைத் தாக்குதற்குரிய இடத்தை அறிதல்.

இ) பகைவரைச் சென்றடையக் கூடாத இடமும் அவ்வாறு சென்றடைவதால் ஏற்புடும் பாதிப்பும்.

ஈ) பிறிது மொழிதல் அணியைக் கையாளும் திறன். (20 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

4) குகனது உதவியுடன் பரதனது சேனைகள் கங்கையாற்றினைக் கடந்து செல்லும் பகுதியை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

அ) யானைகள் பற்றிய வர்ணனை

ஆ) தேர்கள் குதிரைகள் பற்றிய வர்ணனை

இ) மகளிர் பற்றிய வர்ணனை

ஈ) உவமை அணியைக் கையாளும் திறன்

(20 புள்ளிகள்)

5) பிச்சமூர்த்தியின் 'நெருக்கடி' என்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு.

அ) சரவணமுத்துவின் வறுமை நிலை.

ஆ) இன்ஸ்பெக்டர் என்னும் பாத்திரப்படைப்பு

இ) தோட்டம் பற்றிய விபரணம் கதைப்போக்கிற்கு உதவியுள்ள விதம்.

ஈ) கையாளப்பட்டுள்ள மொழிநடை

என்பன பற்றி விளக்குக.

(20 புள்ளிகள்)

6) இலக்கிய கலாநிதி க.நடேசபிள்ளை 'இலங்கையாற்றுபடை' என்ற தனது கட்டுரையில் இராமாயணத்தில் குறிப்பிடப்படும் இலங்காபுரி இலங்கையே என்பதை விளக்க.

அ) வடமொழி தமிழ் இலக்கியங்கள்

ஆ) சாசனச் சான்றுகள்

இ) கர்ண பரம்பரைக் கதைகள்

ஈ) மேல்நாட்டறிஞர்களின் கருத்துக்கள்

ஆகியவற்றினைக் கையாண்டிருக்குமாற்றினை விளக்குக.

(20 புள்ளிகள்)

7) கவிஞர் இ.முருகையனின் 'இரு துயரங்கள்' என்ற நாடகத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வருவன வெளிப்படுத்தப்பட்டிருக்குமாற்றை விளக்குக.

அ) கந்தப்பு, மனோகரன் ஆகிய பாத்திரங்களின் உருவாக்கம் நாடகத்தை வளர்த்தெடுத்துச் செல்ல உதவியுள்ள விதம்.

ஆ) நெறியாளரின் பங்களிப்பு.

இ) ஆசிரியர் கையாண்டுள்ள மொழிநடை

(20 புள்ளிகள்)

8) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.

அ) சிலப்பதிகாரம் 'ஊர் காண் காதையில்' ஊழ் வலிமையின் திறன் எடுத்துரைக்கப்பட்டுள்ள விதம்.

ஆ) 'அமலனாதிபிரான்' என்ற பதிகத்தில் திருமாலின் திருமேனியழகு வருணிக்கப்பட்டுள்ள விதம்.

இ) கண்ணம்மாவின் மீதான தலைவனது காதல் பாரதியாரின் 'கண்ணம்மா என் காதலி' எனும் பாடற்பகுதியில் வெளிப்படுத்தப்பட்டிருக்குமாறு.

ஈ) 'எனக்கு வயது பதின்மூன்று' என்ற சிறுகதையில் ஸல்மா எதிர் கொண்ட பிரச்சினைகளும் அவளுக்கு ஏற்பட்ட மனவுளைச்சல்களும் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் விதம்.

உ) வித்துவான் க.வேந்தனார். 'கவிஞன்' எனும் கவிதையினூடாக கவிஞரிடத்தில் இருக்க வேண்டிய பண்புகள் எவை? என்பதையும் பயன்பாடற்றுப் போகக்கூடிய கவிதைகளின் பண்புகள் எவை? என்பதையும் வெளிப்படுத்தியிருக்குமாறு

(20 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, மார்ச் - 2020**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, March - 2020**

| தரம் :-13 (2020) | தமிழ் - II | மூன்று மணித்தியாலம் 10 நிமிடம் |
|---|---|---|

❖ **பகுதி I இல் உள்ள மூன்று வினாக்களுக்கும், பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

## பகுதி I

1) **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
**ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

1. பின்வருவனவற்றுள் கீழ் இடை உயிர்
   1. அ, ஆ  2. இ, ஈ  3. எ, ஏ  4. ஒ, ஓ  5. உ, ஊ  (   )

2. பின்வருவனவற்றுள் கடை அண்ண வெடிப்பொலி
   1. ப்  2. க்  3. ற்  4. ச்  5. ட்  (   )

3. பின்வருவனவற்றுள் சொல்லின் இடையில் இரட்டித்து வராத மெய்யெழுத்து
   1. க்  2. ன்  3. ழ்  4. ள்  5. ண்  (   )

4. பின்வருவனவற்றுள் பகாப்பதமாக அமையும் சொல்
   1. உடுத்திரள்  2. விண்மீன்  3. நட்சத்திரம்
   4. தாரகைகள்  5. வெள்ளியோடம்  (   )

5. பின்வருவனவற்றுள் எதிர்காலம் காட்ட ‘ப்’ இடைநிலை ஏற்காத வினையடி
   1. வா  2. பார்  3. காண்  4. உண்  5. அடி  (   )

6. பின்வருவனவற்றுள் ‘ய்’ சந்தியாக இடம் பெறும் சொல்.
   1. தாயின்  2. சேயை  3. நாயுடன்  4. வாயால்  5. மலையின்  (   )

7. பின்வருவனவற்றுள் புணர்ச்சியின் போது உகரம் கெட்டும் புணர்ந்த சொல்
   1. பேச்சுக்கு  2. காசுக்கு  3. ஆளிற்கு
   4. வாழ்வுக்கு  5. நாட்டிற்கு  (   )

8. பின்வருவனற்றுள் பெயர்ச் சொல்லின் பண்பாகக் கொள்ள முடியாத கூற்று
   1. பெயரடைகளை ஏற்று வரும்
   2. சில விகுதிகளைப்பெற்று வினையடைகளாகவும் தொழிற்படும்.
   3. பால் காட்டும்.
   4. வினி வேற்றுமையை ஏற்க இடமளிக்காது
   5. அறுவகைப் பெயரினை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.  (   )

9. வேற்றுமை உருபை ஏற்கும் போது தனது வடிவத்தில் மாற்றம் அடையும் வினாப்பெயர்.
   1. எவன்  2. என்ன  3. யார்  4. எவர்கள்  5. எது  (   )

10. பின்வருவனவற்றுள் ஆக்கப்பெயர்.
    1. முயற்சி  2. திணைக்களம்  3. பல்கலைக்கழகம்
    4. எறும்பு  5. மரப்பெட்டி  (   )

11. ‘நேற்று வந்தவன்’ என்னிடம் எதுவும் பேசவில்லை - இதில் இடம்பெற்றுள்ள ‘வந்தவன்’ என்பது
    1. வினையாலணையும் பெயர்  2. கூட்டுப்பெயர்  3. தொழிற்பெயர்.
    4. ஆகுபெயர்  5. முறைப்பெயர்.  (   )



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

12. பின்வருவனவற்றுள் உயல்திணை மரியாதை ஒருமைப்பெயர் கொண்டமைந்துள்ள வாக்கியம்.
1. கவிஞர் போற்றுவர். 2. அறிஞர் மகிழ்ச்சி அடைவர். 3. கவிஞர் பாடுவார்.
4. அயலார் அரவணைப்பார். 5. நண்பர்கள் பேசினார். ( )

13. குமரன் கவலையால் வருந்தினான் - இதில் இடம்பெற்றுள்ள வேற்றுமைப்பொருள்.
1. மூலப்பொருள் 2. உடன் நிகழ்ச்சி 3. காரணப்பொருள்.
4. கலப்புறுபொருள் 5. வரையறைப்பொருள். ( )

14. பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் குன்றிய வினையைக் கொண்டமைந்துள்ள வாக்கியம்.
1. அவர்கள் புத்தகம் வாங்கினர்.
2. நான் விரைவாகப் படித்தேன்
3. புலவர் பாடல் ஒன்றை இயற்றினார்.
4. அவன் கால்களால் விரைந்து நடந்தன்.
5. இராமன் வில்லில் அம்பு தொடுத்தான். ( )

15. இராஜராஜசோழன் கட்டுவித்த தஞ்சைப் பெருவுடையார். கோவிலின் திருக்குடமுழுக்கு இனிதே நிறைவேறியது. இவ்வாக்கியத்தில் இடம் பெற்றுள்ள 'கட்டுவித்த' என்பது
1. தன்வினை 2. பிறவினை 3. காரணவினை
4. முதல் வினை 5. துணைவினை ( )

16. தற்கால வழக்கில் பெரிதும் பயன்படுத்தப்படும் வியங்கோள் வினைமுற்று விகுதி
1. அட்டும் 2. இய 3. இயர் 4. கள் 5. அல் ( )

17. பின்வருவனவற்றுள் விருப்பு ஏவல் வினையின் அமைப்பாக அமைவது
1. வினையடி + பன்மைவிகுதி + ஏன்
2. வினையடி + ஆத் + ஈர்.
3. வினையடி + ஆத் + ஈர்கள்
4. வினையடி + கால இடைநிலை + மை
5. வினையடி + கால இடைநிலை + அது ( )

18. பின்வருவனவற்றுள் 'செய்து' எனும் வினையெச்ச வாய்ப்பாட்டினைக் கொண்டமைந்துள்ள வாக்கியம்
1. எல்லோரும் வீட்டிற்கு வர வேண்டும்.
2. எல்லோரும் வீட்டிற்கு வந்த போனார்கள்.
3. எல்லோரும் வீட்டிற்கு வராமல் விடமாட்டார்கள்.
4. எல்லோரும் வீட்டிற்கு வரத்தான் வேண்டும்.
5. எல்லோரும் வீடிற்கு வருகை தர வேண்டும் ( )

19. பின்வருவனவற்றுள் ஆக்கப்பெயரடை கொண்டமைந்துள்ள வாக்கியம்
1. அவை அழகான மரங்கள்.
2. புதிய புதிய வீடுகள் கண்களைக் கவர்ந்தன.
3. அவன் அடிக்கடி என்னோடு பேசுவான்.
4. எண்ண அலைகளில் விழுந்து தவித்தேன்.
5. செக்கச் சிவந்தவானம் சிந்தையைக் கவர்ந்தது. ( )

20. பின்வருவனவற்றுள் துணைவினை பெற்றமைந்துள்ள வாக்கியம்
1. நாங்கள் எல்லோரும் அவரது இருப்பட‌த்தை அடைந்தோம்.
2. நீங்கள் எல்லோரும் இங்கு வாருங்கள்.
3. நான் உன்னை மட்டும் தான் அங்கு பார்த்தேன்.
4. அரசன் தனக்குரிய அரியணையில் வீற்றிருந்தான்.
5. அவர்கள் அனைவரும் அமைதியாகப் போயிருந்தார்கள். ( )

(01 x 20 = 20 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

**2) அ) பின்வரும் உரைப்பகுதியை 50 சொற்களில் சுருக்கி எழுதுக.**

ஆரியர்கள் இந்தியாவிற்கு வருவதற்கு முன்னரே தமிழர்கள் இங்கு இருந்தனர் என்பது தெளிவு. திராவிட மொழி பேசுவோர். சீன – தீபெத்திய மொழி பேசுவோர், ஆஸ்டிரிக் மொழி பேசுவோர், ஆகியோர் ஆரியர் வருகைக்கு முன்னர் இந்தியாவில் வாழ்ந்த போதிலும் இன்றைய இந்தியப் பண்பாட்டில் நூறில் ஐம்பது பங்குக்கு மேல் திராவிடர்களுடையதே என்கிறார். எஸ். கே. சட்டர்ஜி

திராவிட மொழிக் குடும்பத்தின் தனிச்சிறந்த மொழியாகக் கருதப்படும் தமிழ் மொழியின் தொன்மை இன்று வரையிலும் முழுமையாக ஆழமாக ஆராயப்பட்டு நிறுவப்படவில்லை. தமிழ்மொழி அல்டயிக் மொழிகளோடு கொண்ட உறவுகள் இன்னும் ஆய்ந்து தெளிவுபடுத்தப்படவில்லை. இது போன்றே வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இம் மொழியின் மீது பிற மொழிகள் ஏற்படுத்திய தாக்குரவுகளும் முழுமையாக ஆராய்ந்து காட்டப்படவில்லை.

புராதன திராவிடர்கள் சகாராப் பாலைவனப் பகுதியில் அப்பகுதி பாலைவனம் ஆகும் வரை அதாவது கி.மு 3000 வரை வாழ்ந்தனர் எனவும் மீனைக் குலக்குறியீடாகக் கொண்ட இவர்களின் ஒரு பகுதியினர் ஈரானுக்கும் மற்றொரு பகுதியினர் இந்தியாவிற்கும் சென்றனர் எனவும் அவர்களுள் ஒரு பகுதியினர் தென்கிழக்குஆசிய நாடுகளில் பரவினர் என்றும் கூறப்படுகின்றது. இதன் விளைவாக ஆகம நெறியை அடித்தளமாகக் கொண்ட தமிழர்களின் சமயநெறி தென்கிக்கு ஆசிய நாடுகளில் இன்றும் பரவிக் கிடப்பதாகப் பேசப்படுகின்றது.

எச். பீ. ஹியூபர் என்பவர் தான் எழுதிய கொரிய மொழி நிராவிட மொழி ஒப்பாய்வு என்ற நூலில் கொரிய மொழியில் திராவிட மொழிகளின் பாதிப்பு, குறிப்பாகத் தமிழ் மொழியின் தாக்குரவு அதிகமாகக் காணப்படுவதாகக் காட்டிச் செல்கின்றார். ஜப்பான் மொழியில் தமிழின் பாதிப்பு ஆழமாக ஏற்பட்டுள்ளது பற்றிப் பல்வேறு ஆய்வுகள் ஏற்கனவே நிகழ்த்தப்பட்டுள்ளன.

(13 புள்ளிகள்)

**ஆ) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

சிலப்பதிகார ஆசிரியர ஒரு சமணர், ஐம்பெருங்காப்பியங்கள் எனப்படுபவை எதுவுமே வைதீக சமயத்தினைப் பற்றியது அல்ல. சமணம், பௌத்தம் இரண்டும் கிராமப் புறங்களில் வேரூன்றவில்லை. சமண பௌத்தத் தத்துவங்களும் நகர்ப்புறத் தன்மையுள்ளனவாகவே இருந்தன. நில உடைமை அமைப்பிற்கு உள்ளான அக்கால வணிகவர்க்கம் சமண, பௌத்த மதங்களை ஆதரித்தன. பக்திமார்க்க கால கட்டத்தில், நாயன்மார்களும், ஆழ்வார்களும் சமண பௌத்த மதங்களைக் கடுமையாக விமர்சனம் செய்வதற்குக் காரணம் வைதீக சமயத்தின் எழுச்சி என்றும், பிராமணியச் செயற்பாடு என்றும் கூறப்படுகின்றது. இது மேம்போக்கான காரணம் மட்டுமே ஆகும். உண்மையில் கிராமப்புறங்கள் விவசாயத்தினை மையமாகக் கொண்டவை. நகர்ப்புறங்கள் உணவு அல்லாத மற்றப் பொருளினைவிற்கும் வணிகர்கள் வசிக்கும் இடமாக இருந்தவை. சிலப்பதிகார நாயகன் மூன்று நகரங்களோடு தொடர்புடையவனாவ இருக்கின்றான். அவை புகார், மதுரை, வஞ்சிமா நகரம் எனவே நில உடைமை அமைப்பில் நகரவாசிகளுக்கும் கிராம வாசிகளுக்கும் ஏற்பட்ட மோதலின் வடிகாலாகப் பக்தி மார்க்கம் விளங்கியது. இதற்கு ஒரு சிறந்த உதாரணம் திருநாவுக்கரசரது வாழ்க்கை. அவர் சமனராக இருந்தவர். அவரது சகோதரி சைவ மதத்தினை ஆதரித்தவர். சகோதரியின் போதனையால் அவர் சைவத்திற்கு மாறினார். அவரது மாற்றமானது வணிகவர்க்கத்திற்கும் மகேந்திரபல்லவனுக்கும் பெரும் பிரச்சினையைத் தோற்றுவித்திருக்கும் எனவே தான் அவரைத் கல்லில் கட்டி கடலில் எறிய அரசன் ஆணையிட்டான். ஆனால் எப்படியோ அவர் அதிலிருந்து தப்பிவிட்டார். பின்னர் அரசனும் சைவத்திற்கு மாறினான். திருநாவுக்கரசர் கையில் இருப்பது உழவாரப்படை. அதாவது மண்வெட்டி போன்ற கருவி. இது விவசாயத்தின் சின்னம். இது விவசாயத்திற்கும், நகரப்புறத்திற்கும் ஏற்பட்ட மோதலைக் காட்டுகின்றது. ஏனென்றால் விவசாயப் பெருங்குடியினர்க்கு பக்திமார்க்கம் ஒரு கருத்தியலாக விளங்கியது எனலாம். அதன் நடைமுறை, தத்துவம் ஆகியன பல தரப்பட்ட மக்களுக்கு ஒருவடிகாலாக அமைந்தது எனலாம்.

(i) நாயன்மார்களும் ஆழ்வார்களும் சமண பௌத்த மதங்களைக் கடுமையாக விமர்சணம் செய்தமைக்கு கூறிய மேம் போக்கான காரணம் யாது?

(ii) திருநாவுக்கரரை ஆசிரியர் எதன் குறியீடாகக் குறிப்பிடுகின்றார்?

(iii) பக்தி மார்க்கத்தின் ஏற்றம் எதனை உணர்த்துகின்றது?

(iv) பக்திமார்க்கம் பலதரப்பட்ட மக்களுக்கு வடிகாலாக அமையக் காரணம் யாது?

(v) இவ்வுரைப் பகுதியில் சிலப்பதிகாரம் பெறும் முக்கியத்துவத்தினைக் குறிப்பிடுக.

(vi) சமண பௌத்த சமயங்கள் கிராமப்புறத்தில் வேரூன்ற முடியாமைக்காண காரணம் யாது?

(02 x 06 = 12 புள்ளிகள்)



agaram.lk

www.agaram.lk

3) பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 300 – 350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.
அ) பேச்சுத் தமிழும் எழுத்துத் தமிழும்
ஆ) தமிழ் இலக்கியங்களில் பெண்கள்.
இ) சமூக நல்லிணக்கம்
ஈ) பெருகி வரும் சமூக வன்முறைகள்
உ) தொன்மை மறவேல். (25 புள்ளிகள்)

## பகுதி II

4) அ) சங்க கால இலக்கியங்கள் எட்டுத்தொகை பத்துப்பாட்டு எனப் பாகுபடுத்தியமைக்கான அடிப்படையை விளக்குக.
ஆ) சங்ககாலப் புலவர்கள் இயற்கை மீது கொண்ட ஈடுபாடு இலக்கியங்களினூடாக வெளிப்படுத்தப்பட்டிருக்கும் மாற்றை விளக்குக.
இ) முதல், கரு, உரிப்பொருட்கள் அகத்திணை இலக்கியங்களில் கையாளப்பட்டிருக்கும் மாற்றைத் தெளிவுபடுத்துக. (15 புள்ளிகள்)

5) அ) விஜய நகர – நாயக்கர் கால சிற்றிலக்கியங்களை வகைப்படுத்துக.
ஆ) அக்காலத்தெழுந்த பொதுமக்கட்சார்புடைய இலக்கியங்களின் பொதுவான பண்புகள் குறித்து விளக்குக.
இ) காளமேகப்புலவரின் கவியாற்றல் குறித்து சுருக்கமாக விளக்குக. (15 புள்ளிகள்)

6) இலங்கையில் ஒல்லாந்தர் காலத்தெழுந்த
அ) நிலப்பிரபுத்துவ இலக்கியங்கள்.
ஆ) அகப்பொருள் இலக்கியங்கள்.
இ) அந்தாதி இலக்கியங்கள் என்பன குறித்து விளக்குக. (15 புள்ளிகள்)

7) மேல்வருவோருள் யாரேனும் இருவர் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுக.
அ) பேராசிரியர். வி. செல்வநாயகம்
ஆ) சி. வி. வேலுப்பிள்ளை
இ) உடுப்பிட்டி சிவசம்புப்புலவர்.
ஈ) கவிஞர் அப்துல் காதர் லெப்பை. (15 புள்ளிகள்)

8) அ) (i) பின்வரும் வாக்கியத்திலுள்ள பொருள் மயக்கத்தை இனங்கண்டு விளக்குக.
செல்லம்மா மாதாந்தம் பிள்ளை பெற்றமைக்காக நிவாரணங்களைப் பெற்றுவந்தாள்.

(ii) பின்வரும் வாக்கியத்தில் உள்ள வழுவைச் சுட்டிக்காட்டி வழுவற்ற வகையில் வாக்கியத்தைத் திருத்தி எழுதுக.
பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட நூலகத்தைத் திறந்து வைப்பதற்காக கல்வி அமைச்சர் நாளை வருகிறார் என்னும் தகவலை அதிபர் காலைப்பிரார்த்தனை நிறைவடைந்ததும் அறிவித்தார்.

(iii) குயில் இனிமையாகப் பாடியது.
பாடியது பறந்து போனது
இவ்விரு வாக்கியங்களிலும் உள்ள 'பாடியது' எனும் சொல்லிற்கு இலக்கணம் தருக.

(iv) "அம்மா வரக் குழந்தை அழுகையை நிறுத்தியது" இவ்வாக்கியத்தில் உள்ள எச்சத் தொடரை எடுத்துக் காட்டி அது எவ்வகை எச்சத்தொடர் எனக் குறிப்பிடுக.

(v) பின்வரும் சொற்களில் இடம் பெற்றுள்ள இலக்கணப் பிழைகளைத் திருத்தி எழுதுக.
இடதுபக்கம்
சில அறிஞர்கள்
முன்னூறு ரூபாய்
நாட்கள் (10 புள்ளிகள்)

ஆ) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றிணைப் பற்றிச் சிறுகுறிப்பு வரைக.
(i) பொதுவினை (ii) பகுதி
(iii) ஆக்கப்பெயரடை (05 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk